# தாங்கமுடியாத வேதனையை, இயலாமையை வியாதியை எதிர்கொள்ள தேவன் உங்களுக்கு எங்ஙனம் உதவிடுவார் - நிகழ்ச்சி 3

**ஆன்கர்பெர்க்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: தீராத வேதனையுடம் இருக்கும்போது முடிவில்லாத வியாதியில் வருத்தப்படும்போது தேவனிடத்தில் இருந்து உதவியை பெறுவது எப்படி?

ஜோனி எரிக்சன் டாடா: என்னால இத சகிக்க முடியல. இனி ஒருநாள் கூட என்னால இத தாங்க முடியாது. இந்த முடத்தை தாங்க எனக்கு பலன் இல்ல. ஆனா, தேவனாகிய கர்த்தாவே, நீர் இருந்தால் என்னால் எதையும் செய்யமுடியும், இந்த பெலவீனத்தை கடப்பேன், உங்களோட பெலன் இருந்தால் அது நடக்கும்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:**

இயேசுகிறிஸ்தவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற அமெரிக்கர்களாகிய நாம், இதை தவறாக புரிந்துகொள்கிறோம். நம்முடிடைய எண்ணம், நா இதை செய்தால், தேவன் இதுலும் மேலானவற்றை, உயர்ந்ததை புதிய

காரியத்தை அதி ஆரோக்கியத்தை, செழிப்பை தந்திடுவார் என்று நம்புகிறோம். அப்படியிருந்தால் நிச்சயம் அதிகமாக போராடிக்கொண்டிருபீர்கள். நீங்க வேதனையை சந்திப்பீர்கள், MS உடன், புற்றுநோயுடன், பிப்ரோமையால்கியா, தீராத தண்டுவட வியாதியினால், உங்க வாழ்க்கையில் விரும்பாத வியாதியில் அகப்படுவீர்கள். அதனால, இங்க நா பவுலினுடைய இறையியலை பற்றிகொல்கிறேன். அவர் என்னை நேசிக்கிறார். என்மேல் கரிசனையோடு இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** எனது விருந்தினர்கள்: ஜோனி எரிக்சன் டாடா, ஜோனி மற்றும் நண்பர்கள் ஸ்தாபனத்தின் தலைவர், உடல் ஊனமுற்றோருக்காக நடத்தப்படும் சர்வதேச ஊழியங்கள் மற்றும் Dr. மைகேல் எஸ்லே, மூடி வேதாகம கழகத்தின் மூத்த தலைவராகவும் பெல்லோஷிப் வேதாக திருச்சபையின் போதகராக இருக்கிறார் பெரென்ட்வுட், டேனன்சீ. இந்த விசேஷித்த ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்சிக்கு உங்களை வரவேற்கிறோம். என்னுடைய விருந்தினர்கள் ஜோனி எரிக்சன் டாடா மற்றும் Dr. மைகேல் எஸ்லே, நாம் உபத்திரவங்களை பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நேயர்களில் பலர் இப்போது, வருத்தத்தின்

உபத்திரவத்தோடு இருக்கிறீர்கள். அது ஒருவேளை உணர்ச்சியின் தாக்கமாகவும் இருக்கலாம். உங்க வேலையை நீங்கள் இழந்திருக்கலாம், ஒருவேளை குடும்ப பிரச்சனையாக இருக்கலாம், அல்லது அது வியாதியாக கூட இருக்கலாம். அல்லது ஏதாவது இயலாமையாகவும் இருக்கலாம், ஏதோவொன்று உங்களை சூழ்ந்திகொண்டு உங்களை அழுத்திக்கொண்டிருக்கலாம். எனக்கு ஞாபகம் இருக்குது என்னுடைய தாயாருக்கு லூ கிஹெரிக் என்று வியாதி இருப்பதை அறிந்துகொண்ட நாள், ALS. அவங்க தன்னுடைய நெருங்கிய தோழி இரண்டு வருடங்களுக்கு முன்பு இதே வியாதியில் வேதனைப்பட்டதை பார்த்திருந்தார்கள், நாங்கதான் அவங்கள அடக்கம் பண்ணினோம். அதனால் அடுத்த இரண்டு வருடம் அவங்களுக்கு என்ன நடக்கும் என்பதை எங்க அம்மாவுக்கு நல்லா தெரிந்திருந்தது. ஒருவேளை உங்களில் சிலர் அதே நிலையில் இருக்கலாம். இந்த நிகழ்ச்சி உங்களுக்காகத்தான். உங்களோடு பேசும்படியான சிலர் நம்மத்தியில் இங்கு இருக்கிறார்கள், ஒவ்வொருவராக அவர்கள், தேவன் தங்களுக்கு செய்தவற்றை பகிர்ந்திடுவார்கள், அவர்கள் எப்படி பட்ட உபத்திரவத்தை சந்தித்தார்கள், இப்ப என்னமாதிரியான உபத்திரவத்தோடு இருக்கிறார்கள். மைகேல் உங்ககிட்ட இருந்து ஆரம்பிக்கிறேன். 3 வேதாக காரணங்களை சொல்லுங்க, சுருக்கமாக, எல்லாரும் ஏன் ஏதோவொரு உபத்திரவத்திற்குள்ளாக கடந்து செல்லவேண்டியிருக்கிறது என்பதற்கான 3 வேதாக காரணங்கள்.

**எஸ்லே:** அதை இப்படி பிரித்தெடுப்பது கடினம் ஜான், ஆனா எனக்கு தெரியும், படர்ந்து விரிந்த இவற்றில், முதலாவதாக இருப்பது, நிச்சயமா, பாவம்தான். பாவத்திற்கான விளைவுகள் இருக்கிறது. நான் நினைக்கிறேன் நிச்சயமா ஒருவர், ஒரு பிரட்சையினால் கண்டித்து உணர்த்தப்படும்போது, முதலில் நாம செய்கிற விஷயம், "ஓகே, தேவனே, அப்படின்னா, நா செய்ததோடு இதற்கு ஏதாவது சம்பந்தம் இருக்குமோ?" சங்கீதம் 107ல், சங்கீதக்காரன் எழுதுகிறார், "நிர்மூடர் தங்கள் பாதகமார்க்கத்தாலும் தங்கள் அக்கிரமங்களாலும் நோய்கொண்டு ஒடுங்கிப்போகிறார்கள்." சரி, இன்னும் பல காரியங்களை இதற்கு ஒப்பிட்டு சொல்லமுடியும், ஆனா எல்லாவற்றிற்கும் ஒரு பாதிப்பும் காரணமும் இருகிறது.

இரண்டாவதாக, நாம் உபத்திரவப்படுவதற்கு காரணம் நாம் விழுந்துபோன உலகத்தின் சூழலில் இருக்கிறோம். பவுல் சொல்லும்போது இந்த உலகம் கர்ப்பவேதனையோடு, மீட்ப்பிற்காக ஏங்கியிருக்கிறது என்கிறார். நாமும்கூட, சிலவேளைகளில், இந்த நிலையில் இருக்கிறோம். அதாவது, எனக்கு மூக்கு கன்னாடிபோட்டு பழக்கம் இல்லாம இருந்தது, ஆனா என் கண் பார்வை மாறினது, குறைந்தது, எல்லாருமே தேய்ந்து கொண்டுதான இருக்கிறோம். நாம விழுந்துபோன கலாசாரத்தில் இருக்கிறோம், விழுந்துபோன உலகம். எனவே இதினிமித்தமாக, தீய காரியங்கள் நடக்கிறது. ஆனா எதிர்பாராதவிதத்தில் இதற்கு எல்லாமே தேவன் தான் காரணம்

என்கிறோம். ஆனா நாம் இருக்கும் சூழல் விழுந்துபோன, நிலையில் இருக்க அதில் தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

மூன்றாவதாக, இது கொஞ்சம் அசௌகரியமான ஒன்று,அதாவது ஒருவேளை தேவன் அனுமதித்திருக்கலாம். உபத்திரவத்தில் பங்குள்ளவர்களாக இருப்பதை பற்றி 1பேதுருவில் பார்க்கிறோம், அதாவது தேவனுடைய சித்தத்தின்படி கிறிஸ்துவினிமித்தம் நாம் பாடனுபவிக்கிரவர்களாக இருந்திட வாய்ப்பிருக்கிறது. இன்னொன்றையும் உங்களுக்கு சொல்லுகிறேன், இது எப்போதும் இருக்கிற நிலை கிடையாது. சிலவேளைகளில் என்னுடைய முட்டாள் தனத்தினால் சுய செய்கையினால் நான் உபத்திரவப்படுவதுண்டு. ஆனா சில சமயங்களில் கிறிஸ்துவின் நிமித்தம் நாம் பாடநுபவிக்க வேண்டியிருக்கும். அது எதற்காக என்பதற்கான விடை எனக்கு தெரியாது. ஆனா இந்த உபத்திரவத்தில் அவரோடு பங்குள்ளவர்கலாகும்படி அவரும் கேட்டிருக்கிறார் அதற்கான காரணம் அடுத்த வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும் வரை நமக்கு புரியாத புதிராக இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, சிலர் இந்த விஷயத்தில் நம்பிக்கை இல்லாமல் இருக்கிறார்கள், மறுபடியும் அதை பற்றி நாம தொடர்ந்து பேசிடலாம், அதை இப்ப அப்படியே வைத்திடலாம். ஆனா இப்ப அந்த மூன்று விஷயங்களை நமக்கு முன்பாக வைத்திட விரும்புகிறேன்.

இப்ப என்ன செய்ய விரும்புகிறேன் என்றால், ஜோனி, இது உண்மைதானா, அதாவது இந்த வியாதிகளினால் அல்லது உணர்ச்சி ரீதியான பிரச்சனைகளால், மன அழுத்தத்திற்குள் போக முடியுமா, சரியா. நீங்க பலவிதமான நிகழ்வுகளையும் அனுபவங்களையும் விவரித்து சொல்லியிருக்கிறீர்கள். மற்றவர்களுக்கு பிரயோஜனமாக, உங்களிடம் சில காரணங்கள், இருகிரென்று எனக்கு தெரியும், உங்க வாழ்க்கையில் பல கட்டங்களில் இந்த நிலையை நீங்கள் எதிர்கொண்டிருக்கிறீர்கள். அவற்றில் ஒன்றை இந்த நேரத்தில் சொல்லுங்கள் அதிலிருந்து மீண்டுவர தேவன் எப்படி உதவினார்.

டாடா: மன அழுத்தம் என்ற வார்த்தையில் மைக்கேல் இப்ப சொன்ன எல்லா விஷயங்களும் அடங்கும். மனிதர்களுடைய வாழ்வில் இது ஒரு அங்கமாக இருக்கிறது. வாழ்க்கையில் ஒரு பகுதி. இயேசு சொல்கிறார், “இந்த உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு,”அவர் விளையாட்டுக்கு அப்படி சொல்லல. கடினமாயிருக்க உருவாக்கப்பட்டிருகிறது, மைக்கேல் இப்ப பகிர்ந்துகொண்ட எல்லா காரணங்களும் அதில் பொருந்தும். நா மன அழுத்தத்திற்குள் இருந்தது எனக்கு நினைவிருக்கு, இப்பவும் சில வேலைகள் அப்படியிருக்கும், குறிப்பா நடு ஜாமங்களில் தான் நா படுக்கையில் படுத்திருப்பேன் என்னை பிடித்துகொண்டிருக்கும் இந்த வாதம் எனக்கு பெரிய எதிரியாக தோன்றும். அதாவது, சக்கர நாற்காலில் உட்காரும்போது என்னால அசைய முடியும் எனபது போல பாவனை செய்திடுவேன்,

ஆனா படுக்கையில் என்னால சுத்தமா அசையவே முடியாது. அது எனக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலா இருக்கும்.

தேவன் சர்வவியாபி என்று எனக்கு தெரியும். என்னோட இந்த சிறிய வேதனை அவருடைய வேதனைகளில் சிறிதளவு பொருந்தும் என்று எனக்கு தெரியும் அவர் நினைத்தால் இதை என்னை விட்டு அகற்றிடவும் அவரால் முடியும். ஆனா அப்படி செய்ய அவர் முன்வரவில்லை, இறையியல் காரியங்கள் அனைத்தும் எனது சிந்தனையில் ஓடிக்கொண்டிருக்கும். ஒன்னு சொல்லட்டுமா, சில வேலைகளில் பிதாவிடம் என்னால் போக முடியாது. "உங்க கிட்ட வர்றதுக்கு பயமா இருக்கு. உங்க சர்வத்துவம் அச்சுறுத்துகிறது. அதனால், நீங்க தப்பா நினைக்க மாடீங்கதான, அப்பா, ஆனா இயேசுவிடம் பேச எனக்கு தயக்கமில்லை, ஏன்னா, அதாவது, மைகேல் முன்னாடி சொன்ன எல்லா காரணங்களும், அதற்கு பொருந்தும். நீங்க புரிந்துகொள்வீங்க. நீங்க என்னோடுகூட இருக்கீங்க." சரி, இந்த மாதிரியான இறையியல் கண்ணோட்டங்கள் இறையியல் புத்தகங்களில் பொருந்தாது என்று எனக்கு தெரியும். அதுமட்டுமல்ல, கொலோசெயர் 2:9 ன்படி அவருக்குள், இயேசுவுக்குள், தேவத்துவத்தின் பரிபூரணம் இருக்கிறது. அதாவது, பிதாவும் குமாரனும் ஒன்றாக இருக்கிறார்கள். ஆனால் நா என்னுடைய அறுவைசிகிச்சையின் சிறிய கத்தியை எடுத்துக்கொள்வேன், அதுதான் எதுவும் கைகொடுக்காத சமயத்தில், இயேசு அங்கு இருப்பார், இயேசு.

என்னுடைய மன அழுத்தங்கள் சூழ்ந்த நேரத்தில் ஒன்றை நினைவில் கொள்வேன் இயேசுவை பற்றி நான் இதுவரை கேள்விப்பட்ட எல்லா விஷயங்களும் முற்றிலும் உண்மையே. எனக்கு நானே சொல்லிக்கொள்வேன், எனக்கு நானே பேசிக்கொள்வேன். என்னுடைய ஆத்துமாவிற்கு சொல்வேன், சங்கீதக்காரன் தாவீதை போல, சங்கீதம் நாற்பத்திரண்டு, "என்னாத்துமாவே நீ ஏன் கலங்குகிறாய்? கம் ஆன், கம் ஆன். ஏன் சொர்ந்துபோகிறார்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? "உன் இரட்சகராகிய தேவன் மீது உன் நம்பிக்கையை வைத்திடு." எனக்கு நானே சொல்லிக்கொள்வேன். மனரீதியில் கேட்கப்படும் இல்லை முடியாது என்பதை பொருட்படுத்த மாட்டேன். அதாவது, வேதாகமம் சங்கீதத்தில் அதை ஊக்குவிக்கிறது. நமக்கு நாமே பேச வேண்டியது அவசியம். அப்படி செய்யவேண்டும்,, சங்கீதத்தில் திரும்ப திரும்ப பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது, நினைத்திடுங்கள், சிந்தியுங்கள், தேவனுடைய நன்மையை ஒருபோதும் மறந்துவிடாதிருங்கள்.

அதை பற்றி யோசிப்பேன், ஓ, யாக்கோபு தேவனோடு போராடியத்தை யோசித்து பார்ப்பேன். சாமுவேலை பற்றி யோசிப்பேன் அவர் எபிநேசர் என்று பெயரிட்ட அந்த நினைவு தூணை நினைப்பேன். இதுவரைக்கும் கர்த்தர் எனக்கு உதவி செய்தார். இதுவரைக்கும் கர்த்தர் என்னை நடத்தி வந்தார், நிச்சயமா இன்னொரு அடி என்னை முன்னோக்கி போகச்செய்ய அவரால் முடியும், ஏன்னா நா அவருக்கு ஒரு அடி இடம் கொடுத்தால், அவர் எனக்கு பல ஆயிரக்கணக்கான மைல் தூரம் போக

நம்பிக்கை தருவார். இதெல்லாம் நிஜமானவை என்று எனக்கு தோன்றுகிற காரியங்களை எனக்கு நானே நினைவு படுத்திட இப்படி செய்திடுவேன்.

மன அழுத்தம், அதாவது, உணர்ச்சியின் சமன்பாடு தலைகீழாக மாறும்போது உண்டாகிற ஒரு நிலை. அப்ப முற்றிலும் உடைந்து போவீர்கள் உள்ளாக ஒரு கவலையும் பயமும் துளிர்விடும். அப்ப, இயேசு கிறிஸ்துவை பற்றியும் பிதாவாகிய தேவன் பரிசுத்த ஆவியானவரை பற்றி நமக்கு தெரிந்த உண்மைகளை அசைபோடும்போது, இந்த உணர்ச்சியின் சீரற்ற நிலை சமநிலையை அடைந்திடும். சுலபமாக சுவாசிக்க உதவியாக இருக்கும். மனசு இலகுவாக மாறும். புதிய நிலை உண்டாகு, விசுவாசம் வளர்ந்திடும். ஓ, இதோ, அதிகாலையின் வெளிச்சம் உண்டானது. நா உயிரோடு இருக்கிறேன். என்னால முடியும். தேவனுடைய கிருபையினால், இதை நான் செய்திடுவேன்.

**ஆன்கர்பெர்க்:** மைகேல், வியாதி, நோய், இந்த உணர்ச்சியின் பிரச்சனையில் மன சோர்வை ஏற்ப்படுத்திடும், அது அளவுக்கு மிஞ்சின சோர்வாக இருக்கும். உலகமே இருண்டு காணப்படும், இல்லையா. சொல்லுங்க, நீங்க கழுத்தை இறுக்கிட செய்யும் நிலையை ஏற்க மறுத்துவிட்டீர்கள்.

**எஸ்லே:** ஆமா, அவங்க உங்க கழுத்துல ஒரு இரும்ப வைக்கும்போது, அதற்கு பின்னால என்ன நாடாகும் என்பதை சொல்வதற்கு அவங்க முன்வரவே மாட்டாங்க, நீங்க நினைப்பீங்க, சரி, இது இந்த பிரச்சனையையும் வியாதியையும் குறைக்க உதவும் என்றிருப்பீர்கள். அது ஒருசமயத்தில் உங்களை சக்கர நாற்காலியில் உட்கார வைத்திடும். ஆனா அதற்கு பிறகுதான் அதனுடைய பாதிப்புகளை எதிர்காலத்தில் எதிர்கொள்ள நேரிடும். எனக்கு அது சரியாக இருக்காது, அதாவது, பல சமயத்தில் எனக்கு சோர்வை உண்டாக்கிடும். மன சோர்வை உண்டாக்கும், தைரியத்தை இழக்க செய்திடும், ரொம்ப பயமா இருக்கும், மவுனமா இருப்பேன், உட்கார ஆசைபடுவேன். இதுல நா சிக்கிகொள்ளப்போவதில்லை, இந்த காரியத்தை சந்தோஷமா நா வேற யாருக்காவது கொடுத்திட வாஞ்சையாயிருக்கிறேன் (சிரிப்பு) எனக்கு ஏன் என்ற கேள்வி மவுனமாயிருக்கிறது, ஆனா, “சரி, ஆண்டவரே, அதாவது, என்னைவிட இதற்கு பாத்திரவானாக இருக்கிற அநேகர் இருக்கிறார்களே”. அதனால் இப்ப இந்த மன சொர்வானது உங்க வாழ்நாள் முழுவதும் இந்த வேதனை வலியோடு அசௌகரியமான நிலையில் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை கொடுத்திடும். அதைதான் ஜோனியும் சொன்னார்கள், உங்கள் நிலையை விட்டு வெளியே வந்திடுவீர்கள். வேற ஒரு காரியத்தை செய்திடுவீர்கள், அது ஒருவேளை இயலாமையில் இருப்பவர்களுக்காக இருக்கலாம், அல்லது

என்னுடைய வலி என்னுடைய பிரச்சனை என்ற வட்டத்தை விட்டு வெளியில் வந்திடலாம். அப்படி செய்தால், நான் நினைக்கிறன், இதுதான் கிறிஸ்துவுடனான நம்முடைய நடக்கையை குறிப்பதாக இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துக்கொள்வோம். நாம் திரும்ப வந்ததும், ஒரு திறவுகோல் கேள்வியை குறித்து பேசிட இருக்கிறோம். நாம் எல்லாரும் உபத்திரவப்படுவது வேதத்தை சார்ந்ததா? இதை கேட்டுக்கொண்டிருக்கிற உங்களிடம் கேட்கிறேன், நாம் எல்லாரும் உபத்திரவப்படவேண்டும் வேதம் கூறுகிறதா? ஒருவேளை ஜோனியை போல இல்லாமல் இருக்கலாம், மைக்கேலை போல இல்லாமல் இருக்கலாம், அதைவிட அதிகமாயிருக்கலாம், ஆனா ஏதோவொரு விதத்தில் உபத்திரம் இருக்கிறது. வேதத்தில் இதை பற்றி எங்கு சொல்லப்பட்டிருக்கிறது? அமெரிக்காவின் மேற்கத்திய சமுதாயத்தில் இந்த இறையியலை வெளிப்பதும் சிறிய தீபங்களாக இருக்கிறோம். அதை துரிதமாக உங்களுக்கு எடுத்து சொல்ல விரும்புகிறேன். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு தேவன் கொடுத்த அழைப்பை பற்றி பார்க்க இருக்கிறோம், அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது. நாம் திரும்ப வந்ததும் அதை பற்றி விரிவாக பார்த்திடலாம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வந்திருக்கிறோம். நாம் ஜோனி எரிக்சன் டாடா மற்றும் மைகேல் எஸ்லே வுடன் பேசிக்கொண்டிருக்கிறோம், உபத்திரவத்தை பற்றி இருக்கிறோம், பொதுவாக இந்த தலைப்பை பற்றி நாம அதிகமாக எங்கும் பகிர்ந்துகொள்வது கிடையாது, ஆல்ரைட். ஆனா, உண்மையில் இது, வேதத்தை சார்ந்ததா? ஒருசில வசனங்களை நாம் கூர்ந்து கவனிக்கும்படி உங்களுக்கு முன்பாக வைக்க விரும்புகிறேன், அதற்கு பிறகு மைகேல சில கேள்விகள் கேட்க இருக்கிறேன். இதோ சில வசனங்கள். பிலிப்பியர் 1:29, “கிறிஸ்துவின் நிமித்தமாக பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது”, “தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள்,” கவனிங்க, “தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மை செய்கிறவர்களாய் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக்கொடுக்ககடவர்கள்.” இன்னொன்னு, 1 பேதுரு 4, “பிரியமானவர்களே, உங்களை சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைகுறித்து ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்.” சரி, மைகேல், இந்த வசனத்தின் வெளிச்சத்தில், அப்போஸ்தலனாகிய பவுலை பற்றி பார்க்கலாம் இந்த விஷயம் அவருக்கு பொருந்துகிறதா என்று பார்ப்போம். தேவன்

அப்போஸ்தலனாகிய பவுலை புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியான பொறுப்பை கொடுத்தார், முழு சாம்ராஜ்யத்தை பிடிக்கும்படி இந்த பெரிய பொறுப்பு அளிக்கப்பட்டது, புதிய ஏற்ப்பாட்டில் பெரும்பான்மையான புஸ்தகங்களை எழுதியவர், சரியா. அவரை அழைத்த போது தேவன் அவரிடத்தில் என்ன சொன்னார் என்பதை எங்களுக்கு சொல்லி அதை விளக்கிடுங்கள்.

**எஸ்லே:** ஞாபகம் இருக்குதா, யூதர்களுடைய அனுமதியோடு கிறிஸ்தவர்களை துன்புருத்திடம் அதிகாரத்தோடு இருந்தவர். அவர் தமஸ்குவுக்கு போகிற வழியில் குருடனானார். இதற்கிடையில், அனனியா என்னும் தீர்க்கதரிசி தன்னுடைய தீர்க்கத்தரிச ஊழியத்தை செய்துகொண்டுவந்தார், தேவன் அவரிடம் வந்து சொல்கிறார், “நீ இப்ப தமஸ்குவுக்கு போகணும், நேர்தெரு என்னும் தெருவுக்கு போ. அங்கே சவுல் என்ற பேர்கொண்ட ஒரு மனிதனை காண்பாய். நீ அவனிடம் சொல்ல வேண்டியதாவது, அதாவது, நீ எனக்காக தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரம். நீ அவனுக்கு பார்வையை அளித்திடுவாய்.” என்று சொன்னார். இப்ப அனநியாஸ், இந்த நபர் மிகவும் பிரியப்படவேண்டியவர், அவர் கேட்க்கிறார், “ஆண்டவரே, இந்த மனுஷனை பற்றி கேள்விபட்டிருக்கிறீரா? நா மேம்படுத்தி சொல்லுகிறேன். “உம்முடைய பரிசுத்தவான்களுக்கு அவன் செய்வித்தவைகளை நீர் கேள்விப்பட்டதில்லையோ?” அதற்கு ஆண்டவருடைய பதில், “நீ போ, அவன் நான் தெரிந்துகொண்ட

பாத்திரமாயிருக்கிறான், வேறுபிரித்து, கண்டெடுக்கப்பட்ட ஊழியனாயிருக்கிறான்." அதோடு மேலும் சொல்லுகிறார், "அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய் பாடுபடவேண்டும் என்பதை அவனுக்கு காண்பிப்பேன் என்றார்."

**ஆன்கர்பெர்க்:** ஆமா, நல்ல செய்தியும் இருக்கு கேட்ட செய்தியும் இருக்கு.

**எஸ்லே:** உங்களுக்கு தெரியுமா, இந்த விஷயத்துக்கு நா முன்னால வர விரும்பல. அதாவது, எனக்கு செழிப்பு  ஆரோக்கியம் புகழ் வேண்டும், ஆனா உபத்திரம் 101,1002 103 வேண்டாம். சரி இங்க, இவர் இந்த செய்தியை சொல்ல போகிறபோது, அந்தஇடத்தில், பவுல், உண்மையில் தன பார்வையை திரும்ப பெறுகிறார். இங்க சரித்திரத்தில் நாம கேள்விப்படுகிறோம், அது உண்மையை சொல்லுகிறது, அவர் கட்டப்பட்டிருந்தார், சங்கிலியினால் கட்டுண்டிருந்தார், பலவிதமானசோதனைகளில் போராட்டங்களின் மத்தியில் கடந்து சென்றார். அதனால அமெரிக்கர்களுக்கு கண்ணோட்டத்தில் இல்லாத நிலைதான் எனக்கு ஊழியம் செய்வதற்கும் மேலான ஸ்தானத்தை பெறவும் சுவிசேஷத்தின் நிமித்தம் பாடுபட வேண்டி இருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** பவுல் தான் கடந்து வந்ததாக சொல்லும் சில விஷயங்களை எங்களுக்கு எடுத்து சொல்ல முடியுமா, அதோடு சகல

ஆறுதலின் தேவனானவர் நம்மை எப்படி ஆறுதல் படுத்திகார் என்று சொல்லுங்கள் அதினால் நாம் மற்றவர்களை ஆறுதல் படுத்திட முடியும்.

**எஸ்லே:** சரி, 2 கொரிந்தியரின் துவத்தில் பார்க்கும்போது, ஒரு அருமையான பகுதி இருக்கிறது, வசனங்கள் 3லிருந்து 7வரை, சகல உபத்திரவங்களையும் நான் எதிர்கொள்வோம், அதன் மூலமாக மற்றவர்களுக்கு ஆறுதல் செய்த் தகுதியாகும்படி கற்றுகொள்வோம். மற்ற வழிபாடுகள் அனைத்தும் 11ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது கசையடிகள், நீரில் மூழ்கினது, கப்பற்சேதம், பாம்பு கடி, ஜனங்களால் வந்த மோசங்கள், எல்லா ஆபத்துகள், கள்ளர்கள் திருடர்கள். அது மிகவும் ஆபத்தானதாயிருந்தது. அதற்கு பிறகு அவர் சொல்லுகிறார், “இது எல்லாத்துக்கும் மேல சபைகளினால் உண்டான துக்கம்.” ஆனா இதெல்லாவற்றையும் கிறிஸ்துவுக்குள் மகிமையென கருதுவதாக கூறுகிறார்.இன்னும், அதாவது, நான் நினைக்கிறேன் பவுலினுடைய உபத்திரவத்தின் வாழ்க்கை ஆராயும்போது, அவருக்கு ஒரு வியாதி இருந்ததை பார்க்க முடியும், அது என்னவென்று உறுதியாக நமக்கு தெரியாது, அதிலிருந்து தேவன் அவனுக்கு விடுதலை கொடுக்க வில்லை.

இயேசுகிறிஸ்தவுக்குள் விசுவாசிகளாக இருக்கிற அமெரிக்கர்களாகிய நாம், இதை தவறாக புரிந்துகொள்கிறோம். நம்முடிடைய எண்ணம், நா

இதை செய்தால், தேவன் இதுலும் மேலானவற்றை, உயர்ந்ததை புதிய காரியத்தை அதி ஆரோக்கியத்தை, செழிப்பை தந்திடுவார் என்று நம்புகிறோம். அப்படியிருந்தால் நிச்சயம் அதிகமாக போராடிக்கொண்டிருபீர்கள். நீங்க வேதனையை சந்திப்பீர்கள், MS உடன், புற்றுநோயுடன், பிப்ரோமையால்கியா, தீராத தண்டுவட வியாதியினால், உங்க வாழ்க்கையில் விரும்பாத வியாதியில் அகப்படுவீர்கள். அதனால, இங்க நா பவுலினுடைய இறையியலை பற்றிகொல்கிறேன். தேவன் என்னோடும் ஜோனியோடும் சொன்னாரா என்று எனக்கு தெரியாது, "நீங்க எவ்வளவாய் பாடுபடுவீர்கள் என்று உங்களுக்கு காண்பிப்பேன்." இல்ல ஆனா என்னுடைய உபத்திரவத்தில் மைகேலாக செயல்படுவதை விட பவுலாக அதிகமாய் செயல்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, தன்னுடைய உபத்திரவத்தின் மத்தியில் பவுல் என்ன சொன்னார் என்பதை பற்றி பார்க்கலாம், ஏன்னா உபத்திரவத்தின் ஊடாக கடந்துபோய் கொண்டிருக்கும் நேயர்கள் அதை கேட்க வேண்டும். பவுலுக்கு இருந்து பிரதானமான ஒன்று எல்லா புத்திக்கும் மேலான சமாதானம். நீங்க மற்றொரு உலகத்தை பற்றி சொல்லியிருக்கிறீர்கள் அதாவது, உலகத்தை கடந்த சமாதானம். அதை பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.

**எஸ்லே:** ஆமா, மற்ற உலக நிலை எனக்கு மிகவும் பிடித்த ஒன்று. நாம நினைக்கிற சமாதனம் போல இருக்காது: பிரச்சனையே இல்லாத, வலி இல்லாத, யுத்தம் இல்லாத இடமல்ல. அது இன்னொரு உலகத்தில் இருப்பது போன்றது, அவர் சொல்வதைவிட, புரிந்துகொள்ள முடியாத சமாதானம். அதை என்னால் விளங்கிக்கொள்ள முடியாது. நீங்க அதை பற்றி சொல்லியிருக்கீங்க, ஜோனி அதை பற்றி சொல்லியிருக்காங்க. பல முறை நானே அதை பற்றி சொல்லியிருக்கேன். என்னுடைய அனுபவத்தில், நீங்க அந்த பிடிக்குள் சிக்குண்டு இருக்கும்போது நீங்க கொஞ்சம் நகர்ந்திடும் எண்ணம் கூட உங்களுக்கு வருவதற்கு வாய்ப்பிருக்காது, ஆனா தேவன் உங்களை அதிகமாய் நிரப்பிடுவார் நாங்கள் அதையே பற்றிகொண்டிருப்பீர்கள். நீங்க வலியோட இருக்கலாம், இன்னும் மன சோர்வோடு இருக்கலாம், ஆனா இதிலும் பெரிதானவை இருக்கிறது என்பதை விளங்கிகொள்வீர்கள், அப்போது எல்லா புத்திக்கும் மேலான சமாதானம் உங்களை ஆளுகை செய்யும். இந்த பாடுகளின் மத்தியில், இந்த அசௌகரியமான நிலையில், அவர் உங்களை நேசிக்கிறார், உங்கள் மேல் கரிசனையுள்ளவராக இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஜோனி, இந்த உபத்திரங்கள் என்று சொல்லும்போது உங்கள் நினைவிற்கு வருகிற வசனங்களை சொல்லுங்க, அதோட

இந்த உபத்திரவத்தில் தேவன் எப்படி உதவி செய்கிறார் என்பதையும் சொல்லுங்க.

டாடா: சரி, வசனங்களின் பெரிய பட்டியலை நீங்க இரண்டு பேரும் சொன்னீங்க, நா 2 கொரிந்தியர் 1 ஆம் அதிகாரத்தை முன்வைக்கிறேன், அங்க அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவில் இருக்கும் தனது சகோதரர்களுக்கு எழுதுகிறார், அதில் அவர் சொல்லுகிறார், "சகோதரரே எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிகமான பாரம் உண்டாயிற்று." ஹலோ! எனக்கு புரியிது, ஏன்னா நானும் அந்த நிலையில்தான் இருக்கிறேன். ஓ, தேவனே, இதை சமாளிக்கிறதுக்கு பதிலா செத்திடலாம் போலிருக்கு. அதாவது, அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் அந்த நிலைமை உண்டாயிருந்தது.

ஆனா அவர் அடுத்த வசனத்துல சொல்றத கவனிங்க, இது வல்லமையானது, "நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல் மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையை இருக்கும் படி இப்படி ஆயிற்று." நா ஒவ்வொருநாள் காலையிலும் இந்த வசனத்தை யோசிக்கிறேன். அதாவது, உண்மையில், நீங்க எழுந்திருக்கிற நேரம் உங்களுக்கு தெரியும், ஆனா உங்களோட கண்களை திறக்க முடியாத நிலையில் இருப்பீங்க. எனக்கு என்னுடைய சிநேகிதி சமையல்

அறையில் காபி போடா தண்ணீ எடுக்கிற சத்தம் கேட்கும். அவங்க என்னுடைய படுக்கை அறைக்கு வருவாங்கன்னு தெரியும், என்னுடைய உடம்ப துடைத்து விடுவாங்க, என்னுடைய காலை கடன்களை செய்திடுவாங்க, என்னை தயார் படுத்தி, சக்கர நாற்காலில் உட்காரவைத்து, குழியை அறைக்கு கூட்டீட்டு போய், தலை வாரிவிடுவாங்க, பல்ல தேய்த்து விடுவாங்க, மூக்க சுத்தம் செய்வாங்க. ஆனா என்னுடைய கண்கள் மூடியே இருக்கும், அப்ப யோசிப்பேன், என்னால இத சகிக்க முடியல. இனி ஒருநாள் கூட என்னால இத தாங்க முடியாது. இந்த முடத்தை தாங்க எனக்கு பலன் இல்ல. ஆனா, தேவனாகிய கர்த்தாவே, நீர் இருந்தால் என்னால் எதையும் செய்யமுடியும், இந்த பெலவீனத்தை கடப்பேன், உங்களோட பலன் இருந்தால் அது நடக்கும். அதனால உங்க சிரிப்பா தாங்க, இயேசுவே. அவசரமா உங்க உதவி வேண்டும். இப்ப உங்களை எனக்கு காட்டுங்க.

உங்களுக்கு நா சொல்கிறேன், அவங்க ஒரு கப் காப்பியோடு ஏன் அறைக்குள் வரும்போது, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட அந்த அழகான புன்னகை ஏன் புகத்தில் தெரியும். கடினமான போராட்டம் தான்,. அதை ஜெயித்தேன், அந்த நீண்ட ஆழ்ந்த வல்லமையை பெற்றேன். மைக்கேல் சொன்னபடியே எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதனம் உண்டானது. அதை நான் வாங்கவில்லை, எனக்குள் கொண்டிருக்கிறேன். அதைதான் பவுல் இந்த வசனங்களில் சொலுகிறார் என்று எனக்கு தோன்றுகிறது. நாம் நம்மீது நம்பிக்கை

கொண்டவர்களாக அல்ல, மரித்தோரை எழுப்புகிற தேவனில் நம்பிக்கை வைக்கும்படி ஆயிற்று.

சரி, துரிதமாக சொல்கிறேன், உண்மையில் ஊனமாக இருக்கிற ஜனங்கள், அவங்க காலையில் கண்விழிக்கும்போது, படுக்கையை விட்டு குதித்தெழும்பி, சீக்கிரமாக குளித்து முடித்து, காலை உணவை எடுத்துகொண்டு, ஐந்து நிமிடமாவது தேவனுக்கென்று ஒதுக்கி ஜெபித்திடுவார்கள், அதற்கு பிறகு அவைகளுடைய வழக்கமான காரியங்களால் அவர்கள் வழிநடத்தப்படுபவராக இருந்திடுவார்கள்.

அவருடைய வார்த்தைகளில் சொல்லப்பட்டிருக்கிறது, யாக்கோபு நான்கில், இருப்பது நீங்கதான். நீங்க கிறிஸ்தவராக இருந்தாலும் சரி, தேவன் எதிர்த்து நிர்ப்பார். அவர் பெருமையை எதிர்க்கிறார். பெருமையுள்ளவனை எதிர்த்து நிற்கிறார். ஆனால் - வசனங்களில் இருக்கும் ஆனால் என்ற வார்த்தை எனக்கு பிடிக்கும் - தேவன் கிருபை அளிக்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கு அவர் கிருபை அளிக்கிறார். தால்மையுள்ளவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் சாதாரணமான மக்கள், தங்களுடைய உபத்திரவங்களினால், இரட்சகருடைய கரங்களை தழுவிக்கொண்டு தஞ்சம் புகுந்திட அவரை அன்றி யாரும் இல்லை என்று சொல்லி அவரையே அன்டிக்கொண்டிருக்கிற ஜனங்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு போக வேறு எந்த இடமும் கிடையாது. அந்த உபத்திரவங்கள் அவர்களுடைய கால்களை இறுக பிடித்துகொண்ட கயிறாக மாறியது, அதுவே அவர்களை வேறெங்கும்

போகாமல் சிலுவையை நோக்கி வரும்படியான பாதையில் நடத்தி கொண்டு வருவதாக இருக்கிறது. அந்த சிலுவையன்டையில் தான், கல்வாரியில் தான், மைகேல் சொன்ன அந்த சமாதானத்தை பெற்றோம், நான் சொன்ன சந்தோஷத்தையும் அங்குதான் பெற்றுக்கொண்டோம், அது பூமிக்குரியதல்ல, நம்பமுடியாதது, ஆனால் உண்மையானது.

**ஆன்கர்பெர்க்:** மன அழுத்தத்தை குறித்து பேசினோம், மன சோர்வுகளை பற்றியும் பேசினோம். உபத்திரவத்தை பற்றி பேசினோம். இப்ப மறுபடியும் மன சோர்வை பற்றி பார்க்க விரும்புகிறேன். உங்களுடைய கழுத்து உடைந்தத்தையும் உங்கள் காலங்கள் நிரந்தமானது என்பதை அறிந்துகொள்ளும்போது உங்களுக்கு, வயது 17. உங்க வாழ்நாள் முழுவதும் எல்லாமே மாற்றத்தோட இருக்கும் என்பதை அறிந்துகொண்டீர்கள். நீங்க பாறையான சுவற்றில் மோதிவிட்டீர்கள். அது மாறப்போவதில்லை. அது இன்னும் அதிக மோசமான நிலையாகத்தான் மாறப்போகிறது. இதை விட வேறெந்த விஷயமும் அதிக மனசோர்வை உண்டாக்கிடாது என நினைக்கிறேன். எதற்காக இத சொல்றேன்னா, நேயர்களே, உங்களில் சிலர் கூட இந்த, நிலையில் இருக்கிறீர்கள். மிகவும் சோர்வடைந்த நிலையில் இருக்கிறீர்கள். இதிலிருந்து அவங்க எப்படி வெளியில் வரமுடியும், ஜோனி? தேவனுடைய பதில் என்ன?

டாடா: இந்த நிகழ்ச்சியில் இதுவரை நம்பிக்கையை பற்றி சொல்லவே இல்லை, இருந்தாலும் வேதாகம் நம்பிக்கையின் வார்த்தைகளால் நிறைந்திருக்கிறது. எனக்கு, நம்பிக்கையூட்டும் பகுதியாயிருப்பது ஏசாயா 35, “அப்பொழுது ஒருநாள் குருடரின் கண்கள் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டு போம், அப்பொழுது முடவன் மானைப்போல் குதிப்பான், ஊமையன் நாவு கெம்பீரிக்கும்.” ஓ, மை குட்னஸ், முடக்குவாதம் என்றென்றைக்கும் உள்ளது அல்ல! அதனாலதான், பிலிப்பியர் 3ம் அதிகாரத்தின்படி, ஆவாலாய் - இந்த பதம் எனக்கு ரொம்ப பிடிக்கும் - இரட்சகருக்காக ஆவலாய் காத்திருக்கிறேன்,. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவர் வந்து என்னுடைய சரீரத்தை மகிமையுள்ள சரீரமாக உரு மாற்றம் செய்திடுவார்.

பரலோகத்திற்கு என்னுடைய சக்கர நாற்காலியையும் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன், ஏன்னா ஒருவேளை - இது இறையியல் ரீதியில் சரியல்ல என்று தெரியும் - ஆனா முடிந்தால், இதை நான் முன்பாக வைத்து சொல்வேன், “இயேசுவே, நீங்க இதை பார்க்க முடியுதா? நீங்க உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்று சொன்னது சரிதான், ஏன்னா இது உண்மையில் பெரிய உபத்திரவமா இருந்தது. ஆனா, கர்த்தராகிய இயேசுவே, இதில் நான் எவ்வளவு பெலவீனமா இருந்தேனோ, அவ்வளவாய் உங்களை சார்ந்துகொண்டேன். எவ்வளவாய் உங்களை சார்ந்துகொண்டஏனோ,

அவ்வளவாய் உம்முடைய பெலத்தை நான் அறிந்துகொண்டேன். “ஓ, மை, குட்நெஸ்! உங்களுடைய ஞானத்திற்கு நன்றி, அதாவது நா எலும்பு வாதத்தினால பாதிக்கப்பட்டிருந்தேன் இருந்தாலும் முடமாகவில்லை, ஏன்னா நா இயேசுவை சார்ந்திடுன்தேன், அது கஷ்டம்தான், இருந்தாலும், எனக்கு அது, நம்பிக்கையை கொடுத்தது.

**ஆன்கர்பெர்க்:** இதோட நாம முடித்துக்கொள்ள வில்லை, சரியா. அடுத்த வாரமும் இதை தொடர்ந்திட இருக்கிறோம்.

முடக்குவாதத்தோடு இருக்கும் ஜனங்கள், வாதநோயில் இருப்பவர்கள், புற்றுநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மூளை கட்டியினால், லூ கேஹ்ரிஜ் வியாதி, மல்டிபிள் ச்கீலேரோசிஸ், இப்படிப்பட்டவர்கள் படுக்கையிலேயே நாட்களை கழிக்க தனிமையில் இருப்பதாக உணரலாம், ஓகே, அவர் அறிந்துகொள்ள விரும்புகிற காரியம், என்னுடைய வாழ்க்கைக்கு என்ன அர்த்தம் இருக்குது? இப்ப நா எங்க போவேன்? என்னால் எதுவும் செய்யமுடியாது என்கிறார்கள், ஜோனி, சரி, நிச்சயமாக இதை பற்றி நாம் பேசிடலாம், இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையின் நோக்கம் என்ன தேவன் என்ன நோக்கத்தை வைத்திருக்கிறார். நேயர்களே, இதை நீங்கள் தவற விடவேண்டாம். அடுத்த வாரம் தவறாமல் பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.